

பாமாலை 454 அந்தகார லோகத்தில்

1 அந்தகார லோகத்தில்
யுத்தஞ் செய்கிறோம்
யேசுநாதர் பட்சத்தில்
அஞ்சாமல் நிற்கிறோம்.

பல்லவி

தானியேலைப் போலத்
தைரியம் காட்டுவோம்,
பயமின்றி ஊக்கமாய்,
உண்மையாய் நிற்போம்.

2 பாவச் செய்கை யாவையும்
நேரே எதிர்ப்போம்,
துன்பமே உண்டாகினும்
பின் வாங்கவே மாட்டோம்.

3 வல்ல தேவ ஆவியால்
வெற்றி சிறப்போம்,
லோகம் பாவம் அவரால்
மேற்கொண்டு ஜெயிப்போம்